

உண்மைகள்:

# ஊனமுற்றோர்க்கான பதிவுமுறை பற்றிய தகவல்கள்

Tamil - தமிழ்

ஊனமுற்ற தொழிலாளர்களின் தன்னார்வப் பதிவுமுறை 1 ஜூலை 2021 முதல் தொடங்குகிறது. பதிவுமுறையானது ஊனமுற்றோர் ஆதரவின் தரம் மற்றும் தேர்வினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஊனமுற்றோரைத் தவறாகப் பயன்படுத்தும் பட்சத்தில் விக்டோரிய அரசின் “சட்ட விலக்களிப்பு இன்மை” அணுகுமுறையின் ஒரு பகுதியாகும்.

## பதிவு செய்யப்பட்ட ஊனமுற்றோரை நான் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

ஊனமுற்றோர் சேவைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு ஊனமுற்ற தொழிலாளர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவம் குறித்து உறுதிப்படுத்திக் கொள்வது கடினமானதாகும். அனைத்து ஊனமுற்ற தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் திறன்கள் ஒரே மாதிரி மதிப்பீடு செய்யப்படுவதில்லை. பாதுகாப்பான மற்றும் உயர்தரமான சேவைகளைச் சிறப்பாக அணுக பதிவுமுறை உங்களுக்கு உதவும்.

பதிவு செய்யப்பட்ட விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்கள் எவ்விதமாய் நிதியுதவி செய்யப்பட்டிருந்தாலும் அல்லது பணியில் அமர்த்தப்பட்டிருந்தாலும் விக்டோரியாவின் ஊனமுற்றோர் தொழிலாளர் பதிவு வாரியத்தின் முறைமையாளரினால் பாதுகாப்பான, திறமை வாய்ந்த மற்றும் தொழில்முறை வல்லுநர்கள் என மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்.

ஒரு பணியாளர் பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதை 1 அக்டோபர் 2021 முதல் நீங்கள் www.vdwc.vic.gov.au என்ற இணையதளத்தில் உள்ள ஊனமுற்ற தொழிலாளர்கள் பதிவேட்டில் விரைவாகவும், எளிதாகவும் சரிபார்க்க முடியும்.

## தொழிலாளர்கள் பதிவு செய்யவேண்டியது என்ன?

பதிவு செய்யும் விண்ணப்பதாரர்கள் விக்டோரியாவின் ஊனமுற்றோர் தொழிலாளர் பதிவு வாரியத்தால் (வாரியம்) ஊனமுற்ற தொழிலாளியாகப் பதிவு செய்ய, பாதுகாப்பான பயிற்சிக்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் பண்புகளை வைத்திருப்பதைக் காட்டவேண்டுமென *ஊனமுற்றோர் சேவைப் பாதுகாப்புச் சட்டம் 2018* (சட்டம்) வேண்டுகிறது.

பின்வருவனவற்றைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவு செய்வதற்கான தொழிலாளர்களின் தகுதியையும் வாரியம் மதிப்பீடு செய்யும்:

- பாதுகாப்பான முறையில் செயல்படுத்தும் திறனுக்குத் தீங்கு விளைக்கும் வகையில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஏதாவது குறைபாடு
- தொடர்புடைய குற்றவியல் வரலாறு
- ஆங்கில மொழித்திறன்
- ஊனமுற்றோர் அல்லது சுகாதாரப் பணியாளராகப் பதிவிட்டது ரத்து அல்லது இடைநிறுத்தம்
- சுகாதாரம் அல்லது ஊனமுற்றோர் சேவைகளை வழங்குதல் அல்லது குழந்தைகளைப் பராமரித்தல் தொடர்பான தடுப்பு அல்லது தடை உத்தரவுகள்
- பதிவு செய்யப்பட வேண்டிய நபர் பொருத்தமான மற்றும் சரியான நபர்தானா?

## பதிவு செய்யப்பட்ட ஊனமுற்ற தொழிலாளரை நான் தேர்ந்தெடுக்க முடியுமா?

ஊனமுற்ற சேவைகளை வழங்க, பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

பாதுகாப்பான பயிற்சிக்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் பண்புகள் இருப்பதை அறிந்து, உங்களுக்கான சரியான ஊனமுற்ற பணியாளரை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பதே இதன் பொருளாகும்.

## NDIS திட்டம் எனக்கு இருந்தால் பதிவு செய்யப்பட்ட ஊனமுற்ற பணியாளரை நான் தேர்ந்தெடுக்கலாமா?

ஆம், பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள் NDIS உள்ளிட்ட அனைத்து வகையான நிறுவனங்களிலும் பணியாற்றலாம் அல்லது அவர்கள் சுயதொழில் செய்யலாம்.

பதிவுமுறையானது விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்கள் பாதுகாப்பான, திறமையான மற்றும் தொழில்முறை வல்லுநர்களாக மதிப்பீடு செய்வதை உறுதிசெய்கிறது. இதில் உங்கள் ஊனமுற்ற பணியாளர் எந்த சேவை வழங்குநருக்காகப் பணிபுரிகிறார், அவர்களது சேவைகளை எங்கே விளம்பரப்படுத்துகிறார்கள் அல்லது அவர்களது சேவைகளுக்கு நிதியுதவி எவ்வாறு அளிக்கப்படுகின்றன என்பதெல்லாம் முக்கியமில்லை.

உங்கள் NDIS திட்டத்தின் மூலம் பதிவுசெய்யப்பட்ட ஊனமுற்ற பணியாளரை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பதே இதன் பொருளாகும்.

## பதிவு செய்யப்படாத ஊனமுற்ற பணியாளர் ஒருவரை நான் தேர்ந்தெடுக்கலாமா?

பதிவு செய்யப்படாத ஒரு பணியாளரைத் தெரிவு செய்ய நீங்கள் முடிவெடுத்துக் கொள்ளலாம். விக்டோரியாவில் பதிவு செய்யப்படாத தொழிலாளர்கள் நடத்தை நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். பதிவு செய்யப்படாத ஊனமுற்ற தொழிலாளர்களை விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளருக்கான ஆணையர் ஒழுங்குபடுத்துகிறார்.

ஊனமுற்றோர் சேவைப் பாதுகாப்பு விதிமுறைகள் 2020-ல் ஊனமுற்றோர் சேவைப் பாதுகாப்பு நெறிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளாகும்.

அனைத்து விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்களும் ஊனமுற்றோர் சேவைப் பாதுகாப்பு நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். மேலும் இது ஊனமுற்றவர்களைத் தீங்கு மற்றும் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்க ஒரு தரத்தை வழங்குகிறது.

## ஊனமுற்ற தொழிலாளர் பதிவேடு

பதிவு செய்யப்பட்ட அனைத்து ஊனமுற்ற தொழிலாளர்களும் விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்களின் பொதுப் பதிவேட்டில் பட்டியலிடப்படுவார்கள். இது www.vdwc.vic.gov.au என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

உங்களுக்கு அருகிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஊனமுற்ற தொழிலாளர்களைக் கண்டுபிடிக்க விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்களின்
பதிவேட்டில் தேடிப் பார்க்கலாம்.

விக்டோரிய ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பட்டியலையும் அந்த இணையதளத்தில் நீங்கள் கண்டுகொள்ள முடியும்.

### விக்டோரிய ஊனமுற்றோர் தொழிலாளர் ஆணையம் பற்றியது

விக்டோரிய ஊனமுற்றோர் தொழிலாளர் ஆணையம் என்பது ஊனமுற்றவர்களைச் சிறப்பாகப் பாதுகாப்பதற்கும், வலுவான, பாதுகாப்பான ஊனமுற்றோர் துறையை உருவாக்குவதற்குமாக நிறுவப்பட்ட ஒரு தற்சார்பு அமைப்பாகும். இது ஊனமுற்றோர் சேவைப் பாதுகாப்பு நெறிமுறைக்குக் கட்டுப்பட்டது. விக்டோரியாவில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி ஊனமுற்றோருக்கும் மற்றும் புகார்கள் சேவைக்கும் ஆதரவளிக்கும். மக்களின் பாதுகாப்பை அபாயத்தில் ஆழ்த்தும் தொழிலாளர்களை விசாரித்துத் தடை செய்யும் அதிகாரங்களுடன் இது புகார்கள் மற்றும் அறிவிப்புகளை ஏற்க முடியும்.

எங்களது **vdwc.vic.gov.au** என்ற இணையதளத்துக்கு வருகை தரவும் அல்லது 1800 497 132 என்ற எண்ணை அழைக்கவும்
எங்கள் செய்திமடலுக்குப் பதிவிடவும்
எங்களைப் பின்தொடரவும்